இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 15-10-2025

# காசாவில் நிரந்தர அமைதி!

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு காசாவில் வெடிச் சத்தம் நின்றிருக்கிறது. இது தற்காலிக அமைதிதான். அதனை நிரந்தர அமைதியாக ஆக்கும் கடமையும், பொறுப்பும் உலக நாடுகள் கையில் இருக்கிறது. குறிப்பாக இஸ்ரேல் கையில் இருக்கிறது.

2021 ஆம் ஆண்டும் இதே போன்ற போர் நிறுத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அது நீடிக்கவில்லை. போர் தொடங்கியது. 2023-ஆம் ஆண்டும் போர் நிறுத்தம் செய்யப்பட்டது. அதுவும் நீடிக்கவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக உலகம் பார்த்த கொடுமையானது, மகா கொடுமைகள் ஆகும்.

**கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காசா பகுதியில் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளார்கள். கொல்லப்பட்டவர்களில் 17 ஆயிரம் பேர் குழந்தைகள். 11 ஆயிரம் பேர் பெண்கள். 26 ஆயிரம் குழந்தைகள் தங்கள் பெற்றோரை இழந்துள்ளார்கள். 175 பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 125 ஐ.நா. ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். காசாவின் பெரும்பகுதி ஓராண்டு காலத்துக்குள் அழிக்கப்பட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும்.**

உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக நின்று கொண்டிருந்த 45 பேரை இஸ்ரேல் ராணுவம் சுட்டுக் கொன்றது. பட்டினியால் வாடும் பாலஸ்தீனர்கள் உணவுப் பொருள் ஏற்றி வரும் லாரியை எதிர்பார்த்துக் காத்திருந்த போது அவர்கள் மீது இந்த தாக்குதல் நடந்தது. இதைவிடக் கொடூரம் இருக்க முடியாது.

காசாவில் மரணத்தின் விளிம்பில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு வழங்க உணவுப் பொருட்கள், மருந்துகள், குழந்தைகளுக்கான பால் பவுடர்களைக் கொண்டு சென்ற தன்னார்வலர்களைக் கடந்த வாரம் கடத்தியது இஸ்ரேல். இந்த கப்பலில் 47 நாடுகளைச் சேர்ந்த தன்னார்வலர்கள் சென்றுள்ளார்கள். அவர்களை தடுத்து கைது செய்துள்ளார்கள். இவை சர்வதேச சட்டங்களை மீறும் செயல் ஆகும். இப்படி ஒட்டுமொத்தமாக மனித உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும்தான் காசா பகுதியில் நடந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்த வாரத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இம்முறை அமெரிக்க அதிபர் டிரம்ப் தலையிட்டார். அவர் இப்பேச்சு வார்த்தைகளில் அதிக முனைப்புக் காட்டினார். இது போர் நிறுத்த அறிவிப்பாக முடிந்தது. போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை எகிப்து தலைநகர் கெய்ரோவில் அமெரிக்க அதிபர் டிரம்ப் தலைமையில் நடைபெற்றது. இதன் முடிவில் இருதரப்பினருக்கும் இடையே 20 அம்ச ஒப்பந்தம் கையெழுத்தானது. போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இஸ்ரேல் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

“காசாவில் போர்நிறுத்த ஒப்பந்தம் தொடங்கியது” என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்த பிறகுதான் நம்பிக்கை ஏற்பட்டது. “போர்நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்துவிட்டது. எனவே, பிணைக்கைதிகளை விடுதலை செய்யும் பணி நடந்து வருகின்றது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் இடமாற்றம் செய்யப்படுகிறார்கள். தெற்கு பகுதியில் இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு அச்சுறுத்தல் கொடுத்தாலும் இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் தக்க பதிலடி கொடுப்பர்” என்று இஸ்ரேல் ராணுவத்தின் அறிவிப்பு இதனை உறுதி செய்தது.

**● காசாவிடம் தற்போது உயிருடன் உள்ள 20 பணய கைதிகளை இஸ்ரேலிடம் ஒப்படைப்பது, காசாவில் நிறுத்தப்பட்டு உள்ள இஸ்ரேல் ராணுவத்தை பின் வாங்குவது, நீண்ட காலமாக இஸ்ரேல் சிறையில் உள்ள 250 பேர் மற்றும் போரின்போது சிறைபிடிக்கப்பட்ட 1,700 பேரை விடுவிப்பது என இருதரப்பினரும் ஒப்பந்தத்தில் கூறியதை நிறைவேற்றி வருகின்றனர்.**

காசாவில் இருக்கும் இஸ்ரேல் படைகள் திரும்பப்பெறப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மக்கள் வடக்கு காசாவில் உள்ள தங்களது இருப்பிடங்களுக்கு நடந்தே செல்கின்றனர். ஒப்பந்தத்தின் விளைவாக, பிணைக் கைதிகளை இரண்டு தரப்பும் விடுவிக்கும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

**ஹமாஸ் அமைப்பினர் கட்டுப்பாட்டில் உள்ள பிணைக் கைதிகள் விடுவிக்கப்படும் நடவடிக்கையை வரவேற்று, இஸ்ரேல் மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். தலைநகர் டெல் அவிவில் உள்ள பிணைக் கைதிகள் சதுக்கத்தில், பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.**

ஹமாஸ் தரப்பு தனது ஆயுதங்களை ஒப்படைப்பது போன்ற சிக்கலான விவரங்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. காசாவை நிர்வகிக்கப் போவது யார் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. ‘ஹமாஸ் படைகள் ஆயுதங்களை துறக்காவிட்டால், மீண்டும் தாக்குதல் நடத்தப்படும்’ என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச்சரித்துள்ளார். இது போன்ற கொக்கரிப்புகள்தான் பிரச்சினைகளை மறுபடியும் உருவாக்கும். இந்த எதேச்சதிகாரத் தனத்தை இஸ்ரேல் நிறுத்த வேண்டும். இது போன்ற விவகாரங்களை உலக நாடுகள் பேச வேண்டுமே தவிர இஸ்ரேல் பேசக் கூடாது. இஸ்ரேலை பேச விடவும் கூடாது.

பாலஸ்தீனத்தை தனி நாடாக பெரும்பாலான நாடுகள் அங்கீகரித்திருக்கின்றன. இதனால்தான் இஸ்ரேல் கொஞ்சம் அடங்கத் தொடங்கி இருக்கிறது. இந்த அடக்கம், நிரந்தர அடக்கம் ஆக வேண்டும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், **“இந்த மோசமான நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருத்துவம் உள்ளிட்ட அனைத்து அவசிய உதவிகளும் உடனடியாக முழுமையாக வழங்கப்பட வேண்டும். பாலஸ்தீனர்களின் மறுவாழ்வுத் திட்டம் - காசாவை மறு கட்டமைப்பு செய்வது - மனிதாபிமான உதவிகளை தொடர்ச்சியாக வழங்குவது ஆகியவை குறித்து தெளிவான வாக்குறுதிகள் வழங்கப்பட வேண்டும். உலக நாடுகள் முன் வைக்கும் நிபந்தனைகள், உறுதிமொழிகள் பாலஸ்தீன மக்களுக்கு நன்மை செய்வதாக அமைய வேண்டும்”** என்று சொல்லி இருக்கிறார். இவைதான் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும்.

## தமிழ்நாடு எனும் பெயர் நிலைத்திருக்கும் வரை

# தியாகி சங்கரலிங்கனாரும் நினைவுகூரப்படுவார்!

## நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!



**சென்னை, அக்.15 -**

**விடுதலைப் போராட்ட வீரர் தியாகி சங்கரலிங்கனார் நினைவுநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-**

விடுதலைப் போராட்ட வீரர் தமிழ்நாடு என்ற பெயரை நம் மாநிலம் பெறுவதற்காக 76 நாட்கள் உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்த வீரத்தியாகி சங்கரலிங்கனார் நினைவு நாள்!

அவர் உறுதியாகப் போராடி உயிர்துறந்தும் நிறைவேறாத தமிழினத்தின் பெருங்கனவு, பேரறிஞர் அண்ணா தலைமையிலான கழக ஆட்சி அமைந்த பின்னரே நனவானது.

தமிழ்நாடு எனும் பெயர் இம்மண்ணில் நிலைத்திருக்கும் வரை சங்கரலிங்கனாரும் நன்றியோடு நினைவுகூரப் படுவார்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.10.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி பொறியாளர் (மின்), இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று முன்தினம் (13.10.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயரதிகாரிகள் மங்கத் ராம்சர்மா, பிரதீப் யாதவ், த.உதயச்சந்திரன், திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், திருமதி. வளர்மதி, மா.சௌ. சங்கீதா, சரண்யா அறி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## கரூரில் புதிய பஸ் நிலையம் —

# கல்லூரிகள் - மார்க்கெட் - கோவை - ஈரோடு நான்கு வழி சாலைப் பணிகள் நிறைவேற்றம்!

## கிராம சபைக் கூட்டத்தில், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

*கரூர், அக்.15-*

*கரூரில் புதிய பஸ் நிலையம், கல்லூரிகள், மார்க்கெட், கோவை, ஈரோடு நான்கு வழி சாலைகள் என கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை கிராம சபைக் கூட்டத்தில், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி பட்டியலிட்டு பேசினார்.*

*கரூர் மாவட்டத்தில் உள்ள 157 கிராம ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற்றது. அதையொட்டி தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் ஆண்டாங்கோயில் கிழக்கு ஊராட்சியில் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி ஆகியோர் சிறப்பு பார்வையாளராக கலந்துகொண்டார்கள்.*

*கரூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது: -*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிராமப்புறங்களை நகர்புறங்களுக்கு இணையாக முன்னேற்றுவதற்காக பல்வேறு உட்கட்டமைப்பு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். கிராம ஊராட்சி வெளிப்படையான நிர்வாகத்தினை உறுதிப்படுத்திடும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது.*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றது முதல் ஆண்டாங் கோயில் கீழ்பாகம் ஊராட்சிக்கு மட்டும் சுதந்திரம் பெற்ற நாள் முதல் இதுவரை, இல்லாத ஒரு வரலாற்று நிகழ்வாக, வளர்ச்சி திட்டங்களையும் நலத்திட்டங்களையும், வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.*



*வளர்ச்சித் திட்டப்பணிகளில், வடிகால், சிமெண்ட் சாலை, தார்சாலை, கட்டிடப் பணிகள் ராஜவாய்கால் தடுப்புசுவர் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மிக சிறப்பாக முடிந்திருக்கின்றன.*

*இன்றைய கிராம சபைக் கூட்டத்தில் ஏறத்தாழ ரூ.13 கோடி அளவிற்கான தார் சாலைகள் அமைத்தல், சிமெண்ட் சாலைகள் அமைத்தல், வடிகால்கள், தெருவிளக்குகள், புதிய குடிநீர் திட்டப் பணிகள் என ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட திட்டப் பணிகளை நாம் கிராமசபையிலே வைத்திருக்கின்றோம். முதலமைச்ச ருடைய நிதிகளைப் பெற்று பணிகள் நிறைவேற்றப்படும் என்ற உறுதியை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன். கழக ஆட்சியில் ஏறத்தாழ ஒரே ஊராட்சியில் ரூ.30கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டப் பணிகள் நடைபெற்ற சிறப்பு வாய்ந்த ஊராட்சியாக நம்முடைய ஆண்டாங்கோயில் கிழக்கு ஊராட்சி திகழுகின்றது.*

*ஏற்கனவே பெரியார் நகர் பகுதியில் குறிப்பாக அமராவதி ஆற்றின் குறுக்கே சிறப்பு வாய்ந்த ஒரு தடுப்பணை அமைக்கப்பட்டு அது பொது மக்களுடைய பயன்பாட்டிலே இருக்கின்றது. மகளிர் உரிமைத் தொகையாக இருந்தாலும் சரி. மகளிர் விடியல் பயமாக இருந்தாலும், நான் முதல்வன். தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களை தருகின்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நம்முடைய ஊராட்சி மக்கள் என்றும் உறுதுணையாக இருந்திட வேண்டும் என்று அனைவரிடத்திலும் அன்போடு கேட்டுக்கொண்டு, ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைக்கக் கூடிய ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்.*

*கரூர் மாவட்டம் என்று சொன்னால், தனி கவனம் செலுத்தி அரசின் நிதிகளைக் கொடுத்து, திட்டங்களைத் தொடங்கி வைத்து குறிப்பாக இந்த நான்கரை ஆண்டுகளில் மாவட்டத்திற்கு ஒரு அரசு வேளாண்மை கல்லூரி, ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி. 40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கரூர் புதிய பேருந்து நிலையம், கரூர் காமராஜ் மார்க்கெட் வணிக வளாகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்புத் திட்டங்களுக்கான நிதி களைக் கொடுத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கி இருக்கின்றார்கள்.*

*முதலமைச்சர் அவர்களின் திட்டங்களை இன்னும் நாம் முழுமையாக பெற்று சிறப்பு வாய்ந்த ஊராட்சியாக, முதல் நிலை ஊராட்சியாக வளர்ச்சி பெற்ற ஊராட்சியாக ஆண்டாங்கோயில் கிழக்கு ஊராட்சியை மாற்றிடுவோம். அதற்கு அனைத்து பொதுமக்களும் உறுதுணையாக இருந்திட வேண்டும் என்று அனைவரிடத்திலும் அன்போடு கேட்டுக்கொண்டு, நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த கரூர் கோவை சாலையை நான்கு வழிச் சாலையாக விரிவாக்கம் செய்து எளிதில் பயணம் செய்யக்கூடிய வாய்ப்பினை முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள்.*

*அதேபோல ஈரோடு சாலை விரிவாக்கத்திற்கு ரூ.24 கோடி ரூபாய் நிதிகளைக் கொடுத்து, அந்தப் பணிகளும் நிறைவு பெற்று பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்க இருக்கிறார்கள்.*

*இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வீரபத்திரன், ஊராட்சிகளின் உதவி இயக்குனர் சரவணன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமதுபைசல், வட்டார வளர்ச்சி அலுவலர் வினோத், வட்டாசியர் மோகன்ராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*




திருவாரூர் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ – மாணவிகளுக்கான கவிதை எழுதும் போட்டி மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், கேப்டன். செல்வராஜ், கேப்டன் செல்வராஜ், பூண்டி கே.கலைவேந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.